# கலைஞரோடு ஐக்கியமாகி விட்டேனா?

## மனம் திறக்கிறார் ஜக்கி

இரண்டரைக் கோடி மரங்கள் நடுவதற்கான துவக்க விழா சென்னையில் சிறப்பாக முடிந்த நிலையில், சத்குரு ஜகி வாசுதேவைச் சந்தித்து நமது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டோம்.

***மதங்களை வளர்ப்பதற்குப் பதில் மரங்களை வளர்ப்போம் என்று முதல்வர் உங்கள் விழாவை அரசியலாக்கிவிட்டாரே...***

''முதல்வரின் கருத்தில் நான் முதல் பகுதியையும் வரவேற்கிறேன். என்னுடைய கேள்வியெல்லாம் மதங்களை பரப்ப வேண்டிய அவசியம் என்னவென்பதுதான். அது நமது கலாசாரமல்ல. உலக மக்களையெல்லாம் தங்கள் மதத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்ற பேராசையில் இங்கே படையெடுத்த சில அந்நிய சக்திகளால் வந்த கலாசாரம் அது. உங்களுக்குத் தேவையென்றால் மதத்தோடு ஒன்றியிருங்கள்; தேவையில்லையெனில் விட்டுவிடுங்கள். மதம் வளர்ப்பது, மரம் வளர்ப்பது இரண்டு விஷயங்களையும் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியது இல்லை. மதம் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறீர்களோ இல்லையோ, கட்டாயம் மரம் நடுங்கள். கடவுள் இல்லாமல்கூட வாழ்ந்து விட முடியும்; ஆனால் காற்று, நீர் மற்றும் உணவின் ஆதார ஸ்ருதியாக விளங்கும் மரங்கள் இல்லாமல் வாழ முடியுமா? இது ரொம்ப அடிப்படையான விஷயம். மனித வாழ்க்கைக்கு ஆதாரமாக இருப்பவற்றை வழிபடும் கலாசாரம் நம்முடையது. ஒன்றை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஆன்மிகத்துக்கும் மதத்தைப் பரப்புதலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.''



***மரம் நடுவதுடன் சமூகத் தீமைகளான பெண் சிசுக் கொலை, மதுவின் கொடுமை குறித்தும் நீங்கள் மக்களிடம் விழிப்புணர்வை உண்டாக்கலாமே?***

''மனிதனுக்கு மிகவும் அவசியமான காற்று, நீர், உணவு ஆகியவற்றின் அடிப்படையாக விளங்கும் மரங்கள் நடுவதில் கவனம் செலுத்துவதால் மற்ற கோணங்களைக் கவனிக்காமல் இருக்கிறோம் என்பது பொருளல்ல. ஈஷாவோடு தொடர்புடையவர்கள் அனைவருமே, மனித உயிரை மதிப்பவர்களே தவிர ஆண், பெண் என்று பேதம் பார்ப்பதில்லை. இன்று ஈஷாவின் இளைஞர் பட்டாளம் நூற்றுக்கணக்கான கிராமங்களில் இந்த நோக்கில் பிரசாரம் செய்து வருகிறது. ஒரு தாயோ, தந்தையோ, தமக்குப் பிறக்கும் பெண்

குழந்தையை ஏன் கொல்ல நினைக்கிறார்? அதை வளர்த்து ஆளாக்குவதில் உள்ள பொருளாதார பிரச்னைதான். பிரச்னையின் வேர் என்பது பொருளாதாரம்தான். வறுமையை ஒழிக்கும் முயற்சி வெற்றி பெற்றால் இந்தச் சீர்கேடுகள் தானாக ஒழியும். எங்களுக்கு இருக்கிற நிதி ஆதாரத்தின் அடிப்படையில், நாங்கள் எல்லாச் சவால்களையும் ஒரே நேரத்தில் சந்திக்க முடிவதில்லை.''

**சேதுக் கால்வாய் திட்டம், அரசியல் சகதியில் மாட்டிக் கொண்டுள்ளதே!**

''சேதுக் கால்வாய் மட்டும்தானா? டைட்டானியம், சிர்குர் (மேற்கு வங்காளம்) என்று எல்லா இடத்திலும் சுய லாப அரசியல் புகுந்துகொண்டு தேச வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகள் போடப்படுகின்றன. அரசியல் கட்சிகள் இந்த விவகாரத்தில் ஏன் மூக்கை நுழைக்க வேண்டும்? இங்கே எல்லாவற்றிலும் அரசியல் புகுந்து கொண்டு ஆட்டி வைக்கிறது. எந்த ஒரு வளர்ச்சித் திட்டமாக இருந்தாலும் சரி; மூன்று கோணங்களில் பாருங்கள். சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் பழம் பெருமை - பாரம்பரியம் இதற்கெல்லாம் நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதைக் கேளுங்கள். மக்களின் உணர்வுகளைக் கிளப்பிவிட்டுத் தெருவில் போராட வேண்டாம். அங்கே தீர்மானிக்க வேண்டியது அல்ல இது. இதைத் தேர்தல் பிரச்னையாக்க வேண்டாம். மனிதனால் உருவாக்கப்பட்ட அமைப்பு ஒன்று சேது கடலில் இருப்பதாக நிபுணர்கள் சொன்னால், அதைப் பாதுகாப்பதைப் பற்றி யோசியுங்கள். பாரம்பரியமும் - பழம்பெருமையும் காப்பாற்றப்பட வேண்டுமென்பதில் இருவேறு கருத்துகள் இல்லை. மக்கள் ஆதரவில்லையானால் எந்தத் திட்டமும் சாத்தியம் இல்லை. பெரும்பான்மையான மக்கள் பல காரணங்களுக்காக ஒரு திட்டத்தை வேண்டாம் என்று நிராகரிக்கும் போது அரசு மட்டும் என்ன செய்ய முடியும்?''

**சென்ற வருடம் கலைஞரால் துவங்கப்பட்டு எட்டரை லட்சம் மரக் கன்றுகள் நட்டீர்கள். இப்போதும் மறுபடி அவரையே அழைத்திருக்கிறீர்கள். தமிழக அரசியல் நாகரிகம் மாசு பட்டிருக்கும் நிலையில் ஒரு தலைவரோடு ஐக்கியப்படுத்திக்கொள்வது ஈஷாவின் எதிர்காலத்துக்கு நல்லதா?**

''எந்த ஒரு தலைவரோடும், கட்சியோடும் நான் என்னை ஐக்கியப்படுத்திக் கொள்வதாக நினைக்கவில்லை. நான் ஜனநாயகத்தை மதிக்கிறேன். அந்த அடிப்படையில் முதல்வராக இருப்பவரை நான் கௌரவிக்கிறேன். அதில் என்ன தவறு? இதே ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்துத் தலைவரையும் நான் மதிப்பேன். ஜனநாயத்தில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களை நாம் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். பண்பாடு, நாகரிகம் மாசுபட்டிருப்பின் அதைப் போக்க வேண்டியது மீடியாவின் கடமையல்லவா! என் இந்த அணுகுமுறை எதிர் காலத்திலும் தொடரும்.''



**“நான் ஜனநாயகத்தை மதிக்கிறேன். அந்த அடிப்படையில் முதல்வராக இருப்பவரை கௌரவிக்கிறேன்!”**

**- ப்ரியன்**